4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. C. ராஜலிங்கம், பி.ஏ., பி. எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 97 /2022 நாள்: 03.04.2025 வா.சா.4–லட்சுமணசாமி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை -

14.12.2021 அன்று Muthoot Home Finance ல் செலுத்துவதற்காக ரூ.6,80,000/– 1ம் வாதியிடம் இருந்து பிரதிவாதி கடன் வாங்கியுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்படி கடனை அடைப்பதற்காக தான் 1ம் வாதியிடமிருந்து பிரதிவாதி கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. வீடு விற்பதற்காக தான் வாங்கினார். ஏற்கனவே வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் என்ன சொல்லியுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. சாட்சியாக விசாரிக்கப்பட்ட சுப்பிரமணி என்ற நபர் பிரதிவாதி தாவா தொகையை கடனாக தான் வாங்கியுள்ளார் என்று சொல்லியுள்ளார் என்றும், அதை மறைப்பதற்காக என்னை சாட்சியாக முன்னிலைப்படுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பு வாதிகள் மற்றும் பிரதிவாதி என்ன விவரங்கள் பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேலுச்சாமி தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார். நிருபண வாக்குமூலத்திற்கு அவர் தான் விவரம் சொன்னாரா என்றால் நான் தான் சொன்னேன். வேலுச்சாமி சிவக்குமார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் வேலுச்சாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறான விவரங்கள் கூறி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடன் தொகைக்காக தான் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றும், சொத்தை கிரையம் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்த சொத்து வீடு மற்றும் காலியிடமாகும். அது 5 ½ செண்ட் விஸ்தீரணம் கொண்டது. வீடு 600 சதுரடி

ஆகும். கிரைய ஒப்பந்தம் 2021 ம் ஆண்டு இறுதியில் போடப்பட்டது. தேதி, மாதம் நினைவில்லை. ஒரு செண்ட் நிலம் என்ன விலை என்று தெரியாது. ஒரு சதுரடி வீடு கட்டுவதற்கு ரூ.2000 முதல் 2500 வரை செலவாகும். உண்மையான சந்தை மதிப்பு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்படவில்லை என்றும், சந்தை மதிப்பு அதிகம் இருக்கும் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-C.Rajalingom.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.